15 04. 1989 அன்று நடந்த அந்தப் பதுங்கித் தாக்குதலில் சுபன் அண்ணன் முதன்மைப் பங்கு வகித்தார். 21 படையினர் கொல்லப்பட்டதுடன் அதேதொகையில் ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.

இதன்பின்தான் - 1989இன் நடுப்பகுதியில் - சுபன் அண்ணன் மன்னார் மாவட்டத் தளபதியாக தலைவர் அவர்களால் நியமிக்கப் பட்டார்.

''இன்னொரு விக்ரரின் காலம்'' என்று மன்னார் மக்கள் பேசிக்கொள்ளத் தொடங்கினார்கள்.

சிங்களப் படை தொடுத்த இரண்டாவது போர்க் காலம் -

மன்னார் மாவட்டத்தில் சிங்களப்படை நிலைகொண்டிருந்த இடங்கள் எங்கும் பலமான காவல் அரண்களை நிறுவினார் சுபன் அண்ணன்.

தமிழீழத்திலிருந்த சிங்களப்படைகளின் முகாம்களில் பழமையானவற்றில் ஒன்றாகவும், பாரியவற்றில் ஒன்றாகவும் இருந்த தள்ளாடி முகாமைச் சுற்றி வியூகம் அமைத்தார் சுபன் அண்ணன்.

நான்கு பக்கமும் பெருவெளிகளைக்கொண்டு மையத்தில் அமைந்த தள்ளாடிமுகாமின் சூழல் ஒரு சண்டைக்கேற்றதாக இல்லாமலிருந்தபோதும், வெளியேறும் படையினரை வழிமறித்துத் தாக்குவதற்குச் சாதகமான நிலைகளை சுபன் அண்ணன் தீர்மானித்தார்.

தள்ளாடியிலிருந்து மாந்தை நோக்கி நகரமுனைந்த இராணுவத்தை பலதடவைகள் எங்களது வீரர்கள் திருப்பி அனுப்பிவைத்தனர்.

1990 இன் இறுதிக் காலம் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுராதபுரத்திலிருந்து பெரும் எடுப்பிலான ஒரு படை நகர்வை மன்னார் நோக்கி ஆரம்பித்தது, சிங்கள அரசு.

குறைந்தது இரண்டாயிரம் துருப்புக்கள். டாங்கிகள், கவச வண்டிகள் என 46 இராணுவ வாகனங்கள். பீரங்கிகள் உட்பட கனரக ஆயுதத் தளபாடங்கள்.

லெப். கேணல் வேணு அண்ணன் தலைமையில் விலாச்சியில் வைத்து எதிர்கொண்டது புலிகளின் சேனை. அனுராதபுர மாவட்டத்தின் எல்லையிலுள்ளது அக்கிராமம்.

சுபன் அண்ணன் அந்தச் சண்டையை வழிநடாத்தினார்.

பெரும் உயிரிழப்பையும், தளபாட இழப்பையும் சந்தித்தது மட்டுமன்றி, அந்த இராணுவ அணி தள்ளாடி முகாமை வந்தடைய ஒருமாதகாலம் எடுத்தது.

மன்னார் மக்களின் மனங்களில் நிலைத்துவிட்ட ஒரு தளபதி சுபன் அண்ணன்.

மன்னாரின் வளர்ச்சியில் அவர் மிகுந்த அக்கறை காட்டினார். மக்களின் குறைகளைத் தீர்க்க அவர்களுக்கான - அவர்களின் - அடிப்படை வசதிகளை ஏற்படுத்தப் பாடுபட்டார்; விதைக்காத நெல் வயல்களை விதைப்பிக்க முயற்சி செய்தார்.

தமிழீழத்தில் ஒரு மாவட்டத்தில், அங்கு வீரச்சாவடைந்த எல்லா மாவீரர்களின் நிழற்படங்களைக் கொண்ட ஒரு வீடு முதன் முதலில் அமைக்கப்பட்டது என்றால் அது மன்னாரில்தான்.

மாவீரர் துயிலும் இல்லத்தை மிகவும் சிறப்பாக்க சுபன் அண்ணன் அதிக கவனமெடுத்துச் செயற்பட்டார். அடிக்கடி சென்று பார்த்து வேலைகளைச் சொல்லுவார். கடைசியாகக்கூட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல வேலைகளைச் சொல்லிவிட்டுத்தான் போனார். ஆனால், பார்ப்பதற்கு அவர் திரும்பி வரவில்லை......

எந்த ஒரு சின்ன விடயமாக இருந்தாலும் அதனை அழகாகச் செய்யவேணும் என்று சொல்லுவார்; தானே செய்தும் காட்டுவார். அது தோரணம் கட்டுவதிலிருந்து எல்லா வேலைகளிலும்தான். போராளிகள் ஏதும் தவறிழைக்க நேர்ந்தால் உடனடியாக அவர்களைக் கண்டிப்பார். பின்னர், அரவணைத்து வைத்துக் கதைப்பார்.

தலைவரோடு தானிருந்த காலத்தில் தலைவரிடமிருந்து கற்றவை, அறிந்தவை, தலைவருடைய உணர்வுகள் என்பவற்றை எப்போதும் போராளிகளுக்குச் சொல்லிக் கொடுத்து அவர்களுக்கு நல்வழி காட்டுவார்.

1991 இன் பிறப்பு. இப்போது சுபன் அண்ணன் தனது முகாமை சிலாவத்துறைப் பகுதிக்கு மாற்றிவிட்டு, அங்கேயே எந்நேரமும் தங்கியிருந்தார்.

சிலாவத்துறை சிங்களப்படைமுகாம் மீதான தாக்குதலுக்கான முன்னேற்பாடுகள் மிகத்தீவிரமாக நடைபெற்றுக்கொண்டிருந்த நேரம் அது. அந்த வேலைகளை நேரடியாகக் கவனித்துக் கொண்டிருந்தார் சுபன் அண்ணன்.

அக்காலத்திலேயே, கொண்டச்சி இராணுவ முகாமிலிருந்து சிலாவத்துறை இராணுவ முகாமுக்கு ரோந்து செல்லும் ஒரு இராணுவ அணியை வழிமறித்துத் தாக்க, சுபன் அண்ணன் திட்டமிட்டார்.

17.02.1991 அன்று காலை, தற்போதைய மன்னார் மாவட்டச் சிறப்புத் தளபதி ஜான் அண்ணன் மற்றும் லக்ஸ்மன் அண்ணன் ஆகியோரின் தலைமையில், அந்த இராணுவ அணிமீது புலிகள் பாய்ந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாவற்றையும் சொல்லித்தந்து கொண்டிருந்தாரே...... சுபன் அண்ணன், இனி வரமாட்டாரா?

அந்தத் துயரத்தை எங்களால் தாங்கமுடியவில்லை.

மிகவும் பின்தங்கிய நிலையில் வாழ்ந்த மன்னார் மாவட்ட மக்களை முன்னேற்றகரமான வாழ்வுக்கு இட்டுச்செல்லவேண்டும் என்ற கனவுகளைச் சுமந்துகொண்டு திரிந்தாரே...... இனி அவரை நாங்கள் காணமுடியாதா?

அந்த மக்கள் தாங்கொணாத் துயரத்தில் ஆழ்ந்துபோனார்கள்.

''இன்னொரு விக்ரரின் காலம்'' என்று மகிழ்ந்துகொண்டிருந்த அவர்கள், ''மீண்டும் ஒரு விக்ரரை இழந்துவிட்டோமே'' என்று துயரத்தில் அமிழ்ந்துபோனார்கள்.

சாகும்போதுகூட அந்தச் சாதனையாளன், போராட்ட வரலாற்றில் ஒரு முத்திரை பதித்தான்.

தமிழீழத்தில் சிங்களப்படையின் மிகப்பெரிய பிரதேசம் தாக்கப்பட்டு - மிக நீண்டதூர இராணுவ வேலி ஒன்று அழிக்கப்பட்ட முதல் சம்பவம், பூநகரியில்தான் நடந்தது!

ஓ...... எங்கள் சுபன் அண்ணன்......! தூங்குங்கள். உங்களது கைகளில் வளர்ந்தவர்கள் நாங்கள்...... உங்களது இலட்சியத்தை அடையும்வரை ஓயமாட்டோம்!

– எஸ். பிரதீபன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதிலெல்லாம் - பட்டென்று
புரிந்து விடும் இதன்
வித்தகன் யாரென்று.

போர்கள் உனக்கு புதியவையோ
போய்மடிந்த புலிவீரன் கதை புதியதுவோ
வந்து பார் எம் ஈழ மண்ணிற்கு
உண்மை அது புரிந்து விடும் உனக்கு.

போரில் உன்பேச்சு
கேட்டாலே புது வேகம்
பிறக்கும் - எம் படைக்கு
வாழ்விற்கு வழிகாட்ட
முன்னமே - நீ சாவுக்கு
துணையாக போவாயோ

கன்னியவள் கைப்பிடித்து
காலமெல்லாம் அவள் மடியில்
தலைசரித்து உல்லாசமாய்
விளையாடும் இளவயதில்
எதிரியின் அழிவிற்காய்
அசைவுகளை எதிர் கொண்டு
ஊண் தூக்கம் தான் துறந்து
திரிந்தவன் சுபன்.

படை நடத்தும் போது
பாய்ந்திடும் உன் சொல்லம்புகள்
அவை தாவியே பாய்ந்திடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

